வருகின்ற 2020-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29-ம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னிலை: திருமதி.S.M.பாரிஜான் பி.ஏ.,
தனி அலுவலர் (ம) ஆணையாளர்

1. ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் அக்டோபர் 2020-ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

2. உயர்நீதிமன்ற வழக்கு எண். W.P.No.14074/2020 -ன்படி பவானி கிராமம், சர்வே எண்.774/1, 2 Part வார்டு ஏ, பிளாக் எண்.3 நகரளவு எண்.55 என்ற வெள்ள நிவாரண கமிட்டி பொது இடத்தில் விநாயகர் கோவில் கட்டிய இடத்திற்கு பட்டா வழங்கக்கோரி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேற்கண்ட உயர்நீதிமன்ற வழக்கில் நகராட்சி சார்பில் ஆஜராக வழக்கினை விசாரணை செய்த மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதி எம்.ஆனந்த வெங்கடேஷ் என்பவரின் அறிவுரையின்படி E.பாலமுருகன் சிறப்பு உயர்நீதிமன்ற வழக்குரைஞர் நகராட்சி சார்பில் ஆஜராகி உள்ளார். அதன்படி மேற்கண்ட வழக்கிற்கு வக்காளத்தும், பத்திவாரி குறிப்பும் அனுப்பும் படியும், மேற்கண்ட வழக்கிற்காக வழக்காடு நீதிமன்ற தொகையாக ரூ.15000/-ஐ வழங்குமாறு மின்னஞ்சல் மூலம் நாள்: 09.10.2020 அன்று கடிதம் அனுப்பியுள்ளார்.

எனவே மேற்கண்ட அரசு வழக்கறிஞர் E.பாலமுருகன் என்பவரை உயர்நீதிமன்ற வழக்கு எண். W.P.No.14074/2020 க்கு நகராட்சி சார்பாக ஆஜராகவும், அதற்கான தொகை ரூ.15,000/- ஐ வழங்கவும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழக்கு கட்டணம் ரூ.15000/-ஐ பொது நிதியில் இருந்து E.பாலமுருகன் வழக்கறிஞருக்கு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1250/2020/எப்1)

3. பொது சுகாதார பிரிவின் பராமரிப்பில் உள்ள வாகனம் TN 36 AL 4167-ன் டயர்கள் நான்கும் பட்டன்கள் தேய்ந்து இயக்க முடியாத நிலை உள்ளதனால் பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்படுவது பாதிப்பு ஏற்படுகிறது. எனவே மேற்படி வாகனத்திற்கு நான்கு எண்ணம் 155/80D-12 LT அளவுள்ள MRF SAVARI SET டயர்கள் புதிதாக வாங்கி பொருத்துவதற்கு அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 09.10.2020-ஆம் தேதி விலைப்புள்ளி பெறப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளியாளரின் விபரம் | **4 No's MRF SAVARI SET டயர் ட்யூப் 155/80D-12LT Model விலைவிகிதம்** |
|---|---|---|
| 1. | கவிதா டயர்ஸ்,<br>6/1427, பவானி மெயின் ரோடு,<br>காளிங்கராயன்பாளையம், பவானி | ரூ.10,100/- |
| 2. | கவுண்டர் ஆட்டோ சென்டர்,<br>1033, மெயன் ரோடு,<br>பவானி-638 301 | ரூ. 9,950/- |
| 3. | கவுண்டர் கார் ஸ்டுடியோஸ்,<br>51/1ஏ, லட்சுமி நகர்,<br>காளிங்கராயன் பாளையம்,<br>பவானி-638 318 | ரூ.10,000/- |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் வ.எண்.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள M/S கவுண்டர் ஆட்டோ சென்டர், 1033 மெயின் ரோடு, பவானி என்பவரின் ரூ.9,950/- என்ற விலைவிகிதம் மற்றவைகளை விட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்திடமிருந்து டயர்கள் கொள்முதல் செய்து கொள்ளவும், அதற்காகும் செலவினம் ரூ.9,950/-க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரி பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.274/2020/ எச்1)

4. பவானி நகராட்சி - பொது சுகாதாரம் - இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் சுகாதார பணிகள் மேற்கொள்ள அரசாணை நிலை எண்:101 (ந.நி.கு.வ.துறை), நாள்: 30.04.1997ன் படி இந்நகராட்சிக்கு தேவையான துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 177 ஆகும். ஆனால், இந்நகராட்சியில் தற்போது 54 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வரும் நிலையில் இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்: 2255/எச்1/2019, நாள்: 29.11.2019-ன் படி, திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இந்நகராட்சிக்கு வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் 63 துப்புரவு பணியாளர்களை M/s Relyon Facility Services Private Ltd, Chennai நிறுவனத்திடமிருந்து பெற்று துப்புரவு பணிகள் நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். K.DIS No 35508/J3/நாள்: 26.06.2020-ன் வாயிலாக இந்நகராட்சிக்கு கூடுதலாக 60 பணியாளர்களையும், ஏற்கனவே வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது 63 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டு அப்பணியாளர்களை கொண்டு நல்லமுறையில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில், தற்போது ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் எதிர்வரும் 01.12.2020 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில், M/s Relyon Facility Services private Ltd, Chennai அவர்களின் கடிதத்தின் வாயிலாக 01.12.2020-ஆம் தேதியுடன் முடிவடைகின்ற ஒப்பந்த பணியினை மேலும் 02.12.2020 தேதி முதல் 31.03.2021-ஆம் தேதி வரையிலான காலத்திற்கு இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்: 2255/எச்1/2016, நாள்: 29.11.2019ல் குறிப்பிட்டுள்ள அதே நிபந்தனைகள் மற்றும் Terms and Conditions-க்கு உட்பட்டு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.612/- என்னும் விலைவிகிதத்தில் தொடர்ந்து பணியாளர்களை வழங்கி பணி மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து சம்மதக் கடிதம் இந்நகராட்சிக்கு வழங்கியுள்ளார்.

இந்நிலையில் தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் (NGT) வாயிலாக 100 சதவீதம் குப்பைகளை தரம் பிரித்து சேகரித்து 100 சதவீதம் அறிவியல் முறைப்படி Final Disposal செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டு தற்போது இந்நகராட்சியில் மேற்குறிப்பிட்டவாறு திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தற்போது கோவிட்-19 வைரஸ் நோயினை கட்டுப்படுத்திட அரசால் ஊரடங்கு உத்திரவு (Lockdown period) பிறப்பிக்கப்பட்டு நோய் தடுப்பு நடவடிக்கைகள் போர்கால அடிப்படையில் (COVID – 19 Preventive Measures on War Putting Manner) மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் நகரின் சுகாதாரப்பணிகள் தங்கு தடையின்றி நடைபெற வேண்டியது அத்தியாவசியமாகிறது. மேலும், தற்போது மழைக்காலம் தொடங்கி உள்ளதன் நிலையில் டெங்கு காய்ச்சல் மற்றும் தொற்று நோய்கள் நகரில் பரவாமல் தடுக்க சுகாதாரப் பணிகளை திறம்பட மேற்கொண்டு நகரின் சுகாதாரத்தினை நல்ல முறையில் பராமரிக்க வேண்டியது நகராட்சியின் முக்கிய பொறுப்பாகும் என்பதால் தற்போதுள்ள சூழ்நிலையை கருத்தில் கொண்டு மேற்படி சுகாதார பணிக்கான ஒப்பந்தகாலத்தை 02.12.2020 ஆம் தேதி முதல் 28.02.2021 வரை நீட்டிப்பு செய்து தொடர்ந்து பணி கொள்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ. 30.00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.2255/2015/எச்1)

5. பவானி நகராட்சி பகுதிகளில் உள்ள 27 வார்டுகளிலும் கொசுக்களால் பரவும் டெங்கு காய்ச்சல் உள்ளிட்ட தொற்றுநோய்கள் பரவாமல் தடுக்க நோய் தடுப்பு பணிகளை நல்ல முறையில் மேற்கொள்ள வீடுவீடாக சென்று கொசுப்புழு மருந்து தெளிப்பு பணி, கொசு உற்பத்தியாகும் இடங்;களை அழித்தல் மற்றும் முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்த புகை மருந்து தெளிக்கும் பணிகளை மேற்கொள்ள ஏற்கனவே இந்நகராட்சிக்கென 35 Domestic Breeding Checkers பணியாளர்களை அயற்பணி ஒப்படைப்பு (Outsourcing Basis) முறையில் ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தி பணிகளை மெற்டிகாள்ளப்பட்டு வருவதன் ஒப்பந்தகாலம் 05.11.2020-ஆம் தேதியுடன் முடிவடைகிறது. இந்நிலையில் மேற்படி நோய் தடுப்பு பணிகளை இந்நகராட்சிப் பகுதியில் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டி உள்ளது.

மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்களின் கடிதம் ந.க.எண்: 12800/2019/G2, நாள்: 20.09.2019-ன் படி Unskilled Labour - Mazdoor Category- II-ன் படி நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.440/– வீதம் தினக்கூலியாக வழங்கிட தெரிவித்துள்ளார்கள். மேற்படி ஊதிய விகிதத்தில் 35 பணியாளர்களை 53 வேலை நாட்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி அயற்பணி ஒப்படைப்பு (Outsourcing Basis) முறையில் பணி மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. அதற்கான செலவினம் பின்வரும் விபரப்படி கணக்கிடப்படுகிறது.

| வ. எண் | விபரம் | தொகை(ரூபாயில்) |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.440/- வீதம் வேலை நாட்களுக்கு 440 X 53 X 35 | **816200** |
| 2 | EPF **13 %** | **106106** |
| 3 | ESI **3.25 %** | **26527** |
| 4 | Administrative Expenses **5 %** | **40,810** |
| | | |
| | **TOTAL** | **989,643** |
| | **ROUNDED OFF** | **9,90,000** |

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணைகள் கடித ந.க.எண்: 1819/2016/எல்3, நாள்: 08.11.2016-ன் படி EPF and MP Act 1952-ற்கு இணங்கிட வேண்டும் என தெரிவித்துள்ளார்கள். எனவே, மேற்கண்டுள்ள விபரப்படி பணியாளர்களுக்கு EPF and MP Act 1952 ESI Act 1948- ன் படி மேற்கண்டவாறு செலவினம் கணக்கிடப்படுகிறது. எனவே, பணி வழங்கும் நாளிலிருந்து 53 வேலை நாட்களுக்கு மேற்காணும் செலவினத்தின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரி அயற்பணி ஒப்படைப்பு (Outsourcing Basis) முறையில் பணிமேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. நோய் தடுப்பு பணியின் அவசியம் கருதி நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 274/2020/எச்1)

6. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்த வெளியில் மலம் கழித்தலை தடுத்தல், திடக்கழிவுகளின் உற்பத்தியினை குறைத்திடுதல், கழிவுகளை மறுசுழற்சி செய்தல் மற்றும் மீண்டும் பயன்படுத்துதல், கழிவுகளை உற்பத்தியாகும் இடத்திலேயே உரம் தயார் செய்தல் போன்றவைகள் குறித்து இந்நகராட்சி பகுதியில் உள்ள பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிக்கு பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்: 1897/2017/பி3, நாள்: 16.10.2020-ன் படி M/s Southern Solid Waste Management Service, No: 12/182, Appattuvillai, Kottamavu, Malgumoodu(Po), Kanyakumari (Dt) அவர்களுக்கு உத்திரவிடப்பட்டு அந்நிறுவனம் வழங்கும் பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களை கொண்டு 16.10.2020 முதல் 31.03.2021 வரை இந்நகராட்சிக்கு 7 பரப்புரையாளர்கள் மற்றும் 1 மேற்பார்வையாளர் அனுமதிக்கப்பட்டு விழிப்புணர்வு பணி மேற்கொள்ளுமாறு உத்திரவிடப்பட்டுள்ளது.

**பணியில் ஈடுபடுத்தப்படும் பணியாளர்களுக்கு கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது அதன் விபரம் பின்வருமாறு:**

| | | |
|---|---|---|
| 1 | பரப்புரையாளர் ஒருவருக்கு மாதம் ஒன்றிற்கான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | ரூ.14,259.92/-, |
| 2 | மேற்பார்வையாளர் ஒருவருக்கு மாதம் ஒன்றிற்கான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | ரூ. 19,548.82/-, |
| 3 | Service Charge | 9.19 % |

எனவே, மேற்படி நிறுவனத்தினர் மூலம் பரப்புரையாளர்கள் 7 நபர்கள், மேற்பார்வையாளர் ஒருவர் என்னும் அடிப்படையில் அந்நிறுவனத்திடம் இருந்து பெற்று இந்நகராட்சியில் பணிமேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் மனித ஆற்றல் வழங்கும் நிறுவனமான M/s Southern Solid Waste Management Service, No: 12/182, Appattuvillai, Kottamavu, Malgumoodu(Po), Kanyakumari (Dt) அவர்களுக்கு இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து பட்டியல் தொகையினை விடுவிக்கவும், SBM திட்ட நிதியில் தொகை இல்லாத காலங்களில் பொது நிதியிலிருந்து தொகையினை நகராட்சி நிதிநிலைக்கேற்ப (Financial Circumstances) வழங்கிடவும், பின்னர் SBM திட்ட நிதியிலிருந்து தொகை பெற்ற பின்பு பொது நிதிக்கு சரி கட்டி கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1325/2020/எச்1)

7.பவானி நகராட்சி அலுவலக கட்டிடத்தில் பராமரிப்பு செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.3.50 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.184, நாள்: 30.09.2020 அனுமதி அளித்துள்ளதின் பேரில் 28.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.எஸ். பாலசுப்ரமணியன், ஒப்பந்ததாரர் | 0.12% | மதிப்பீட்டு விகிதத்தை விடகுறைவு |
| 2 | திரு.P.A. செல்லப்பன் ஒப்பந்ததாரர் | 0.79% | மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட0.12% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.பாலசுப்ரமணியன், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1169/2020/இ1)

8. பவானி நகராட்சி கழிப்பிடங்கள் பராமரிப்பு பணி செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.185, நாள்: 30.09.2020 அனுமதி அளித்துள்ளதின் பேரில் 28.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| | திரு.P.A. செல்லப்பன் ஒப்பந்ததாரர் | 0.04% | மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 1 | திரு.எஸ். பாலசுப்ரமணியன், ஒப்பந்ததாரர் | 0.95% | மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட0.04% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.P.A. செல்லப்பன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1404/2020/இ1)

9. பவானி நகராட்சி அனைத்து வார்டுகளிலும் உள்ள சிறு மின் விசைப்பம்புகள், விசை பம்புகள், மற்றும் கழிப்பிடங்களில் உள்ள ஏர்கம்ப்ரசர்கள் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை 2020- 21-ம் நிதியாண்டு ஆண்டு பராமரிப்பு பணி செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.186, நாள்: 30.09.2020 அனுமதி அளித்துள்ளதின் பேரில் 28.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.M. முருகேசன் ஒப்பந்ததாரர் | 0.40% | மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திரு.சி.சின்னசாமி ஒப்பந்ததாரர் | 1.25% | மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.40% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.M. முருகேசன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1092/2020/இ1)

10. இந்நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்கவும் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிக்கு தேவைப்படும் விழிப்புணர்வு Flex போர்டுகள், விழிப்புணர்வு நோட்டீஸ்கள், அபராத கட்டண புத்தகங்கள் மற்றும் தனிமைபடுத்தப்பட்ட வீடுகளில் ஒட்ட பயன்படும் கலர் ஸ்டிக்கர்கள் மற்றும் தனிமைபடுத்தப்பட்ட வீடுகளில் சேகரமாகும் கழிவுகளை தனியே அனுப்பிட Yellow Bags வாங்கிய பணிகள் போன்றவைகளும், லைசால், பிளீச்சிங் பவுடர் போன்ற கிருமி நாசினிகள், பணி பாதுகாப்பு உபகரணங்கள், தானியங்கி Hand Sanitizer Machine கொள்முதல் செய்தல் மற்றும் பொதுமக்களுக்கு கபசுர குடிநீர் மற்றும் நிலவேம்பு குடிநீர் வழங்கிட டீ கேன்கள் கொள்முதல் செய்தல் போன்ற பணிகள் நோய் தடுப்பு பணிகளின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கீழ்காணும் நிறுவனத்தினரிடம் இருந்து கொள்முதல் செய்தும், பணிகள் மேற்கொண்டும் நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<u>கொள்முதல் செய்யப்பட்ட பொருள்களின் / பணிகளின் விபரம்:</u>

| | | | |
|---|---|---|---|
| 1 | Dettol liquid 5 liters can 2 no's | 10 litres | M/s ஸ்ரீ பாலு மெடிக்கல்ஸ், 6/456 ஏ, கவுந்தபாடி ரோடு, காளிங்கராயன் பாளையம், பவானி |
| | Hand Sanitizer 5 liters can 2 no's | 5 litres | |
| | Hand wash Soap oil | 10 litres | |
| | Dettol Soap 125 gram | 100 No's | |
| | Hand Sanitizer | 15 litres | |
| 2 | 3 Ply face mask 18 GSM Layer | 7000 No's | M/s Sri Auro Raam Fire safety and Equipments, 9/2, Akilmedu 6th Cross Street, Near Bus stand Back side, Erode - 638 001. |
| | Nitrle Hand Gloves (1 box of 100 pcs) | 100 Box's | |
| 3 | Supply of PPE kit | 50 No's | M/s K. NandhaKumar(Old No-279) 548, Agraharam Street, Erode. |
| 4 | Lysol 5 % | 150 litres | M/s Sri Kaliyamman Trading Corporation, No:6, R.S Building, Kulakkarai street, Kamaraj Nagar, Namakkal |
| | Lysol 5 % | 500 litres | |
| | Bleaching Powder | 5000 kg. | |
| | Lysol 5 % | 300 litres | |
| 5 | 7 ½ liters Tea can | 2 No's | M/s Mallika Metal Store, 174, Mainroad, Bhavani |
| | 5 liters Tea can | 1 No | |
| 6 | 12 * 8 Flex Board Fitting | 5 No's | M/s Leaf Flex, 155-A/2, State Bank Upstair, Sathi mainroad, Kavundapadi - 6. |
| 7 | Covid-19 Non Mask Wearing Spot Fine Book | 15 Book's | M/s Tiruppathi Designers, 227/2, Salem Mainroad, Komarapalayam |
| | Covid-19 Awareness Notice Book | 5 Book's | |
| | Covid-19 Non Mask Wearing Spot Fine Book | 10 Book's | |
| | Awareness Notice | 10000 No's | |
| | Home Quarantine Multi color sticker | 445 No's | |

| | | | |
|---|---|---|---|
| 8 | 3 ply Face mask 18 GSM 3 layer | 2500 No's | M/s Sri Auro Raam Fire safety and Equipments, 9/2, Akilmedu 6th Cross Street, Near Bus stand Back side, Erode - 638 001. |
| | Nitrle Hand Gloves (box of 100 pcs) | 25 Box's | |
| | Supply of PPE kit | 150 No's | |
| | Automatic Hand Sanitizer Machine | 1 No | |
| | Nitrle Hand Gloves (box of 100 pcs) | 75 Box's | |
| | Disposable face mask 3 ply18 GSM | 10500 No's | |
| | PPE kits | 50 No's | |
| | Yellow Colour bags BMW | 100 No's | |

மேற்படி, பொருட்கள் மற்றும் பணிகளை நோய் தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட நிறுவனத்தினர்களின் விலைவிகிதத்தில் கொள்முதல் செய்து நோய் தடுப்பு பணிகள் மேற்கொண்டதற்கான செலவினம் ரூ.13,63,698/-னை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கியதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (ந.க.எண்.360/2020/எச்1)

11. புதிய பேருந்து நிலையத்தில் உள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான ஸ்ரீஸ்ரீ கடை எண்.40க்கு 9 வருட குத்தகை காலம் 16.08.2020 ___ல் முடிவடைவதால் மேற்படி கடைக்கு வாடகை மறு மதிப்பீடு கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| கடை எண். | கடை அளவு | தற்போதைய வாடகை | மறுமதிப்பீடு வாடகை | வைப்புத் தொகை 12 மாத வாடகை |
|---|---|---|---|---|
| 40 | 10x8 | 2053 | 4110 | 49320 |

மேற்கண்ட வாடகை மற்றும் வைப்புத் தொகை நிர்ணயம் செய்ய தனி அலுவலர் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் (ந.க.எண்.1275/2017/அ2)

இடம்: பவானி
நாள்: 29.10.2020

(ஒம்)திருமதி.S.M.பாரிஜான்
ஆணையாளர்/தனி அலுவலர்
பவானி நகராட்சி